

# முடிவுரை

# முடிவுரை

"கண்ணதாசன் கவிதைகளில் மனிதநேயக் கோட்பாடுகள்" என்ற தலைப்பிலமைந்த இந்த ஆய்வின், முன்னர் உள்ள இயல்களில் கண்டறியப்பட்ட செய்திகள் இவ்வியலில் தொகுத்துத் தரப்படுகின்றன.

இருபதாம் நூற்றாண்டின் சமுதாய முன்னேற்றம், அரசியல் விழிப்புணர்வு, பொருளாதார நிலை, சமுதாயச் சிந்தனைகள் ஆகியவற்றின் தாக்கத்தால், தமிழ்க் கவிதையுலகில் பல மாற்றங்கள் நிகழ்ந்துள்ளன.

கால மாற்றத்திற்கேற்பக் கவிதையின் உள்ளடக்கமும் மாற்றம் பெற்றுள்ளதை, இக்காலக் கவிதைகள் உணர்த்துகின்றன. மக்களின் தேவைகளையும், சமுதாய முன்னேற்றத்தையும் கருத்திற் கொண்டு மனிதநேய உணர்வை நிலை நாட்டும் வகையில் அமையும் படைப்புகளே காலங்கடந்தும் போற்றப்படுகின்றன. இவ்வகையில் சமுதாயத்தில் ஏற்படும் சிக்கல்களைச் சுட்டி, அவற்றிற்கான தீர்வுகளைத் தெரிவு செய்து மனித ஆற்றலை, மனிதனுக்கு உணர்த்துவதைக் கவிஞர்கள் தங்கள் கடமையாகக் கருதினர்.

சங்க காலம் முதல் தற்காலம் வரை எழுந்த கவிதைகளில், மனிதநேய உணர்வின் தேவைகள் சுட்டிக்காட்டப்பட்டுள்ளன. இவற்றுள் வறுமை நிலை பொருளாதார ஏற்றத்தாழ்வு, சாதி சமயப் பூசல்கள், தனிமனித உணர்வுகள் ஆகியவை குறிப்பிடத்தக்கனவாய்

விளங்குகின்றன. மனிதநேயத்தை நிலை நிறுத்த அன்பு, அறம், ஈகை, இரக்கம் முதலிய பண்பு நலன்கள் வலியுறுத்தப்பட்டுள்ளன. ஆயினும் இத்தகு கவிதைகளில் பெரும்பாலும் மனிதநேயத்தின் உயர் குறிக்கோள் நிலை சுட்டிக் காட்டப்பட்டுள்ளதே தவிர, சமுதாயச் சீர்கேடுகளை ஒழித்து காட்டபட்டுள்ளதே தவிர மேம்படுத்துவதற்கான யதார்த்த நிலைத் தீர்வுகள் குறிப்பிடப்படவில்லை..

இருபதாம் நூற்றாண்டுக் கவிஞர்களில் நடப்பியல் நிலையைக் கருத்திற் கொண்டு, மனித நலன் போற்றும் வகையில் கவிதைகள் எழுதுவோர் வரிசையில் கண்ணதாசன் முக்கிய இடம் வகிக்கின்றார். கட்சி சார்ந்த நிலை, கட்சி சாராத நிலை, என்ற இரு நிலைகளும் மக்கள் நலன் சார்ந்த நிலையை, இவர் தம் கவிதைகளில் காணமுடிகின்றது. சமுதாய முன்னேற்றம் குறித்த அரிய கருத்துக்களையும், எளிய, இனிய நடையில் வெளிப்படுத்துவதால் இவரது கவிதைகள் காலங்கடந்தும் போற்றப்படும் தகுதி வாய்ந்தனவாய் உள்ளன.

கண்ணதாசன், மனிதனை நெறிப்படுத்த உதவும் உயரிய ஒழுக்க விதிகளைத் தன்னகத்தே கொண்ட மனிதநேயத்தைத் தன் கவிதைகள் வாயிலாக மக்களுக்குப் புகட்ட முனைந்துள்ளார். பல்வேறு அரசியல் கட்சிகளைச் சார்ந்திருந்த போது கவிதைப் பொருண்மை மொழி இன உணர்வு, சாதி எதிர்ப்பு என்ற குறிப்பிட்ட வட்டத்திற்குள்ளேயே சுழன்று வந்த நிலையைக் காண முடிகின்றது. கட்சிகளிலிருந்து விலகிய

பின் எழுந்த கவிதைகள் சமுதாய நலனை முதன்மைப்படுத்தும் வகையில் அமைந்துள்ளன.

சமுதாயத்தில் நிலவும் மெய்ம்மைகளைக் கண்டறிந்து. பிறரது துன்பங்களைக் களைய முற்படும் பணியைக் கண்ணதாசன் தன் கவிதைகள் வழி மேற்கொண்டுள்ளார்.

1) மனிதநேயம் ஒரு விளக்கம்
2) மனிதநேயக் கோட்பாடு - வரையறைகள்
3) இந்திய மரபில் மனிதநேயமும் அதன் வளர்ச்சியும்
4) இலக்கியங்கள் காட்டும் மனிதநேயம்
5) கண்ணதாசனும் அவரது கவிதை வரலாறும்
6) கண்ணதாசனின் சமுதாயச் சிந்தனைகள்
7) கண்ணதாசனின் பொருளாதாரப் பொதுவுடைமைச் சிந்தனைகள்

ஆகிய இயல்களின் வாயிலாக இந்த ஆய்வின் முடிவுகள் கண்டறிப்பட்டுள்ளன.

"மனிதநேயம் ஒரு விளக்கம்" என்ற முதல் இயலில், மனித நேயத்தின் தொன்மை ஆகிய செய்திகள் உரைக்கப்பட்டுள்ளன.

"மனிதநேயக் கோட்பாடு - வரையறைகள்" என்னும் இரண்டாம் இயலில், மானுடம் போற்றும் பல கருத்துகளை வலியுறுத்துகின்றது.

"இந்திய மரபில் மனிதநேயமும் அதன் வளர்ச்சியும்" என்ற மூன்றாம் இயலில், மனிதநேயத்தின் சிறப்பை சிறப்பாக கூறப்படுகிறது.

"இலக்கியங்கள் காட்டும் மனிதநேயம்" என்ற இயலில் சமுதாய வளர்ச்சிக்கு தேவையான அடிப்படை கருத்துக்களை கொண்டு அமைகின்றது. மனிதன் மனிதனாக வாழ்வதற்கான அடிப்படைநியதிகளை வகுத்தளிக்கும் மனிதநேயம், சங்க காலத்திலிருந்து கவிஞர்களால் இயம்பப்பட்டு வந்துள்ளது.

மனித நல உணர்வு சான்ற இலக்கியங்களே உலகோரால் உயர்வாகக் கருதப்படும் நிலையைத் தமிழிலக்கியங்கள் உணர்த்துகின்றன. சமுதாயச் சீர்கேடுகளை ஒழிப்பதன் மூலம், மனிதநேயத்தை மலரச் செய்ய முடியும் என்ற கருத்தைத் தமிழிலக்கியங்கள் தெளிவுப்படுத்துகின்றன. அனைத்து உயிர்களிடத்தும் அன்பும், கருணையும் கொள்ளுதல், அன்றாட வாழ்க்கையில் அடுத்தவர்க்கு உதவுதல், அநீதிகளை எதிர்த்தல், மனிதப் பண்புகளைப் போற்றுதல் முதலிய அடிப்படை நியதிகளே மனிதநேயம் ஆகின்றது.

உலகியலறிவையும், வாழ்க்கை நியதிகளையும் எழுதியதோடு மனிதநேய உணர்வை வடித்துக் காட்டுவதையும் கவிஞர்கள் தங்கள் கடமையாகக் கருதினர்.

"கண்ணதாசனும் அவரது கவிதை வரலாறும்" என்ற ஐந்தாம் இயலில், சமுதாயத்தைச் சீர்த்திருத்தும் நோக்கிலும், தன்னியல் உணர்வுகளை வெளிப்படுத்தும் நோக்கிலுமாகிய இருவேறு நிலைகளில் படைப்பாளர்கள் இலக்கியங்களைப் படைக்கின்றனர். இவற்றில் எழுத்தாளரின் தன்னியல் உணர்வோடு மக்கள் நலன் ஒருங்கிணையும் போது, அவ்வெழுத்துக்கள் எக்காலத்தும் போற்றத்தக்க வகையில் பொலிவுறுகின்றன.

கண்ணதாசன் கவிதை, கதை, கட்டுரை, நாடகம் போன்ற பல துறைகளின் வாயிலாத் தன் எண்ணங்களை எழுத்தில் வடித்துள்ள போதிலும், கவிதைத் துறையில் சிறந்த முத்திரைப் பதித்துள்ளார். கால மாற்றங்களால் ஏற்பட்ட கருத்து மாற்றங்கள் கண்ணதாசனின் கவிதைப் பொருண்மை மாற்றத்திற்கு வழிகோலின. சமுதாயம், அரசியல், பொருளாதாரம் ஆகிய கூறுகள் வாயிலாக இவரது கவிதைகளில் மக்கள் நலச் சிந்தனைகள் வெளிப்படுகின்றன.

"கண்ணதாசனின் சமுதாயச் சிந்தனைகள்" என்னும் ஆறாம் இயலில் சமுதாயத்தைப் பற்றிய சிந்தனைகளில் கண்ணதாசனின் மனிதநேய மனம் படம்பிடித்துக் காட்டப்பட்டுள்ளது. இன்றைய சமுதாயத்தில் மலிந்துள்ள குறைகளைப் பற்றியும், அவற்றைக் களைவதற்கான வழிவகைகளைப் பற்றியும் இவர் கவிதைகள் ஆராய்ந்துள்ளன.

சாதி, சமய, இனவேறுபாடுகள், பெண்ணுரிமை தொடர்பான சிக்கல்கள், கல்வித்துறைச் சீர்கேடுகள், வேலையில்லாத் திண்டாட்டம், வேலை நிறுத்தம், வன்முறை, குடும்பக் கட்டுப்பாடு ஆகியவற்றைப் பற்றிய சிந்தனைகள் கண்ணதாசன் கவிதைகளில் காணப்படுகின்றன. சாதி, மத, வேறுபாடுகளைக் கடந்த நிலையிலான ஒருங்கிணைந்த சமுதாயத்தை உருவாக்க வேண்டுமென்ற வேட்கை இவர் கவிதைகளில் காணப்படுகின்றன.

பெண் விடுதலைக்குப் புறம்பாகப் பெண்களுக்கு இழைக்கப்படும் பல இன்னல்கள் பற்றிக் கவிதைகள் சிந்தனையை எழுப்புகின்றன. வரதட்சனைக் கொடுமை, விதவைகளின் துயரம், விலைமாதரின் வாழ்வியற் சிக்கல் போன்ற பெண்ணுரிமைச் சிக்கல்களைக் கண்டு வருந்துகின்றார். ஆண்களின் மன உறுதியும், காதல் திருமணமும் வரதட்சணைக் கொடுமையை அகற்றும் வழிகளாகக் கூறப்பட்டுள்ளன.

கல்வி, வேலையின்மை ஆகியவற்றை பற்றியும், வேலை வாய்ப்புக்கு வழி வகுக்காத கல்வித் திட்டத்தை மாற்றியமைக்க வேண்டுமெனக் கருதும் கவிஞர் தொழிற்கல்வியைப் போற்றுவதன் மூலம் சிக்கலுக்குத் தீர்வளிக்கின்றார். அனைத்து உயிர்களிடத்தும் அன்பும், இரக்கமும் கொண்ட கவிஞரை அவர் தம் கவிதைகள் இனங்காட்டுகின்றன.

அரசியல் சீர்கேடுகளைத் சுட்டிக்காட்டிச் சாடும் கண்ணதாசன்,அவற்றை எதிர்த்துப் போராடத் தூண்டுவதால் சமுதாய விழிப்புணர்வுக்கு வழி வகுத்துள்ளார். சிக்கல்களைத் தீர்க்கும் வழி வகைகளையும் விளக்குகின்றார்.

"கண்ணதாசனின் பொருளாதாரப் பொதுவுடைமைச் சிந்தனைகள்" என்ற ஏழாம் இயலில், சமுதாயத்தில் நிலவும் பொருளாதார ஏற்றத்தாழ்வுகளையும், ஏழை - பணக்காரரிடையே நிலவும் வேறுபாடுகளையும், பசித்துயரையும், சுரண்டல் கொடுமைகளையும் கண்டிக்கிறார். மேலும் இக்கொடுமைகள் தீர்வதற்கான வழிமுறைகளையும் சுட்டியுள்ளார்.

வீங்குகின்ற செல்வம் வீங்குவதும், ஏங்குகின்ற நெஞ்சம் ஏங்குவதும் ஆபத்து என்ற பொருளாதார ஏற்றத்தாழ்வைப் பற்றிய எச்சரிக்கை இவரை ஒரு பொருளியலறிஞராகவும் கருத வைக்கிறது. சமத்துவச் சமுதாயத்தை அமைப்பதன் மூலமே வறுமையையும், பொருளாதார ஏற்றத்தாழ்வையும் சமுதாயத்திலிருந்து ஒழிக்க முடியும் என்கிறார்..

## *கண்ணதாசனும் மனிதநேயமும்*

கண்ணதாசன் கவிதைகளில் பலவகைக் கூறுபாடுகள் பாடுபொருள்களாக அமைந்திருப்பினும், அவையனைத்திலும் அடிநாதமாக அமைந்திருப்பது மனிதநேயப் பண்பே ஆகும்.

சமுதாயம், அரசியல், பொருளாதாரம் எனப் பலவாறாகப் பிரிந்து கிடக்கும் கவிதைகளின் மையப் புள்ளியாக மனிதனே காணப்படுகிறான். மனிதனை ஒதுக்கி வைத்துவிட்டு எழும் பாடுபொருள்களே இல்லை என்னும் அளவிற்கு இவரது கவிதைகள் மனிதத்தை மதிக்கின்றன. தன்னுணர்வு வெளிப்பாடாக அமைந்துள்ள கவிதைகளிலும், மனித சமுதாயத்தை எண்ணியே பாடும் நிலையைக் காண முடிகின்றது.

நாடு, மொழி, இன உணர்வுகளைத் தாண்டி பரந்த மானுட நலம் விழையும் போக்கும், சிறுமைகளை ஒழித்து மனிதநேயமிக்க சமுதாயம் மலர வேண்டுமென்ற எண்ணமும் இவரது கவிதைகளில் வெளிப்படுகின்றது.